


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 178

சனிக்கிழமை
23 மே 2026

வைகாசி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


ரூபாவின் பெறுமதி சரிவு

# சர்வ கட்சிக்கூட்டத்தை உடனடியாக நடத்துக

எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

**கொழும்பு, மே 23**

**ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள சரிவு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அனைத்துக் கட்சிக்கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் நேற்று வலியுறுத்தியுள்ளன.**

»11



## தமிழர் காணிகளை விட்டு இராணுவமே வெளியேறுக!

ஐந்தாவது வாரமாக மயிலிட்டி மக்கள் போர்

யாழ்ப்பாணம், மே 23

வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, ஐந்தாவது வாரமாக மயிலிட்டி மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலிகாமம் வடக்கில் படையினரின் பிடியில் உள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என வலி

»11

## பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்படவில்லை!

நிதியமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, மே 23

ரூபா வலுவிழந்து செல்வதற்கு பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்பட்டமையே பிரதான காரணம் என்று வெளியாகும் தகவல்களை நிதியமைச்சு முற்றாக நிராகரித்துள்ளது.

நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த

»11

சீரற்ற காலநிலை

## 14 மாவட்டங்களில் கணிசமான பாதிப்பு

கொழும்பு, மே 23

நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் உட்பட 14 மாவட்டங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்

»11

கடற்படையின் பிடியிலுள்ள

## முள்ளிக்குளம் காணியை உடனடியாக விடுவிக்குக!

ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

மன்னார், மே 23

மன்னார் - சிலாவத்துறை பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையின் பிடியிலுள்ள காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

»11

இலங்கைச் சிறையில் உள்ள

## இந்திய மீனவர்களை உடன் விடுவியுங்கள்

தமிழகத்தில் போராட்டம்

சென்னை, மே 23

இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழகத்தில் பாம்பன் பாலத்தை முடக்கி நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி பாம்பன் துறைமுகத்தில் இருந்து கடற்றொழிலுக்காகப்

»11

## உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு அதிகார வெறியே காரணம்!

பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவிப்பு



கொழும்பு, மே 23

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு அதிகார வெறியே காரணம். பிணங்களில் ஏறிநின்றாவது அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று சிலர் எண்ணியதால் தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது - இவ்வாறு பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

»11

## போதை ஒழிப்புக்கு இளைஞர் மாநாடு!

விரிவு பக்கம்:- 03



## நுரைச்சோலை மின் நிலையம்; சூழல் பாதிப்பை ஆராயக் குழு

விரிவு பக்கம்:- 05

சிவாஜிலிங்கத்தின் மருத்துவச் செலவு

## ஒருமாதச் சம்பளத்தை வழங்கிய நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், மே 23

மூத்த தமிழ் அரசியல்வாதியும், வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளருமான எம்.கே.சிவாஜிலிங்கத்தின் சிறுநீரக மாற்று அறுவைச்

»11

கௌரிசங்கரி தவராஜா அறக்கட்டளையால்

## ஒரு மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், மே 23

சிவாஜிலிங்கத்தின் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக திருமதி கௌரி சங்கரி தவராஜா ஞாபகார்த்த அறக்கட்டளை சார்பில் ஒரு

»11

முரச்சந்தி முரளி

"விடுவியுங்கோ, கூட்டுங்கோ, போங்கோ எண்டு ஒரே கோரிக்கைச் செய்தி மயமாக் கிடக்கு கண்டியளோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4439 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 10 38 57 79 |
| விசேட எழுத்து | G |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1506 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 07 40 41 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0465 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 6 5 0 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2545 |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கங்கள் | 16 21 53 74 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6197 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 2 4 1 4 5 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2227 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 12 19 46 82 |
| விசேட எழுத்து | Z |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0313 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 17 37 60 |

# உயர் குருதி அழுத்தத்தால் நாட்டில் 34 வீத மரணங்கள்!

கொழும்பு, மே 23

**இலங்கையில் வாழும் மக்களில் மூன்றில் ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் காணப்படுகின்றது. நாட்டில் பதிவாகும் மொத்த மரணங்களில் சுமார் 34 சதவீதமான மரணங்கள், உயர் இரத்த அழுத்தத்தினால் ஏற்படும் பல்வேறு பக்கவிளைவு நோய்களினாலேயே நிகழ்கின்றன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் ஸ்ரீனி அலகப்பெரும தெரிவித்துள்ளதாவது-

உயர் இரத்த அழுத்தம் உடலில் இருப்பதே பல நேரங்களில் நமக்கு வெளியில் தெரிவதில்லை. இதனால்தான் இதனை 'மௌனக் கொலையாளி' என அழைக்கிறோம். குறிப்பாக 35 வயதுக்கு மேற்பட்டவர்கள், தங்களுக்கு எவ்வித நோயறிகுறிகளும் இல்லை என்றாலும், குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அல்லது ஒரு வருடத்துக்கு ஒருமுறையாவது தங்களது இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும்.

இதன் மூலமே பாதிப்பு உள்ளதா என்பதை ஆரம்பத்திலேயே கண்டறியமுடியும். இலங்கையில் பொதுவாக மூன்றில் ஒரு நபருக்கு உயர் இரத்த அழுத்த பாதிப்பு உள்ளது. 63.9 வீதமானோர் சிகிச்சை பெறுவதில்லை. பாதிப்புள்ளவர்களில் 63.9 சதவீதமானோர் தங்களுக்கு இந்த நோய் இருப்பதை அறியாமலோ அல்லது அலட்சியமாகவோ எவ்வித மருத்துவ சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்வதில்லை.

சிகிச்சை பெற்றுவரும் எஞ்சிய நபர்களிலும்கூட, 39.1 சதவீதமானோரின் இரத்த அழுத்தம் முறையான உணவு மற்றும் மருந்துப்பழக்கம் இன்மையால் கட்டுப்பாட்டில் இல்லை.

உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு நம்முடைய அன்றாட உணவுப்பழக்கவழக்கமே மிக முக்கியமான காரணியாக அமைகிறது.

அன்றாட உணவுகளில் அதிகளவு உப்பு சேர்த்துக்கொள்வதே இரத்த அழுத்தம் அதிகரிப்பதற்கான பிரதான காரணமாகும். துரித உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் அதிக உப்புள்ள பொரியல் வகைகளைத் தவிர்ப்பதுடன், தினசரி உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமே இதிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0905 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 0 0 4 6 6 4 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3171 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 22 48 73 80 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 19 38 41 61 |
| வெற்றி வாரம் | 5332 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 1001 |
| வெற்றி இலக்கம் | 30 34 41 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ரிஷபம் | |
| வெற்றி இலக்கம் | 14 48 55 62 |
| சீட்டிழுப்பு வாரம் | 4883 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 29 |
| வெற்றி இலக்கம் | 20 54 64 68 |
| வெற்றி வாரம் | 2347 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 22.05.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 18 19 46 54 |
| வெற்றி வாரம் | 2997 |

## மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, மே 23

தற்போது நிலவும் கனமழையால், 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கைகளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ளது.

அதன்படி, கம்பஹா மாவட்டத்தில் உள்ள அத்தனகல்ல பகுதிக்கும், இரத்தினபுர மாவட்டத்தில் உள்ள குருவிட்ட மற்றும் இரத்தினபுர பகுதிகளுக்கும் இரண்டாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மழையுடனான காலநிலை 6 பாடசாலைகளுக்கு பூட்டு!

கொழும்பு, மே 23

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட கல்வி வலயத்துக்குட்பட்ட 6 பாடசாலைகளை நேற்று மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பலத்த மழை காரணமாக கேகாலை அவிசாவளை வீதி தெஹியோவிட்ட பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## அதிகூடிய மழை வீழ்ச்சி கிரிந்திவெலவில் பதிவு!

கொழும்பு, மே 23

நாட்டில் அதிகூடிய மழை வீழ்ச்சி கம்பஹா மாவட்டத்தின் கிரிந்திவெல பகுதியில் பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைவாக, நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ( முதல் நேற்று வெள்ளிக்கிழமை வரையான காலப்பகுதியில் கம்பஹா மாவட்டத்தின் கிரிந்திவெல பகுதியில் 244 மில்லி மீற்றர் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மீன் பதனிடும் நிலையம் இரணைமடுவில் திறப்பு

கிளிநொச்சி, மே 23

நோர்வே மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கங்களின் நிதியுதவியுடன், சர்வதேச தொழிலாளர் அமைப்பால் திலாபியா மீன் பதனிடும் நிலையம் இரணைமடுக் குள வளாகத்தில் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

இரணைமடு நன்னீர் மீன்பிடிச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், இந்தியாவில் உள்ள நோர்வே தூதரக அரசிற்குழுவின் தூதரகச் செயலாளர் டார்மோட் நூலாண்ட் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, பதனிடும் நிலையத்தைத் திறந்துவைத்தார்.

நிகழ்வில் ILO இன் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பணிப்பாளர் ஜோணி சிம்சன், காகில்ஸ் நிறுவனத்தின் குழுமப்பணிப்பாளர் ஹரிதாஸ் பெர்ணான்டோ ,வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் செல்வி செகராஜா அகல்யா ,கிளிநொச்சி மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், கைலாசபிள்ளை பிரகாஸ் ,மாவட்ட நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை விரிவாக்கல் உத்தியோகத்தர் ஜோகநாதன் நிசாந்தன் மற்றும் மீனவர்கள் கலந்துகொண்டனர். (க-113பி)

## கட்டுநாயக்கவில் கனமழை திருப்பப்பட்டன விமானங்கள்

கொழும்பு, மே 23

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை நிலவிய கடும் மழை காரணமாக அங்கு தரையிறங்க வந்த 9 விமானங்கள் மத்தல விமானநிலையத்துக்கும், இந்தியாவின் கொச்சின் மற்றும் திருவனந்தபுரம் விமானநிலையங்களுக்கும் திருப்பிவிடப்பட்டுள்ளன. அதற்கமைய, மத்தல விமான நிலையத்துக்கு 6 விமானங்கள் திருப்பிவிடப்பட்டுள்ளன.

மேலும் 2 விமானங்கள் இந்தியாவின் கொச்சின் விமானநிலையத்துக்கு திருப்பிவிடப்பட்டுள்ளன. அதேவேளை, புதுடில்லியிலிருந்து கட்டுநாயக்கவுக்கு வருகைதந்த எயார் இந்தியா நிறுவனத்துக்கு சொந்தமான விமானம், மீண்டும் இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்துக்குத் திருப்பிவிடப்பட்டுள்ளது என்றும் விமானநிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போதை ஒழிப்புக்கு இளைஞர் மாநாடு!

**கொழும்பு, மே 23**
**போதைப்பொருள் அபாயத்தை வேரோடு ஒழிப்பதற்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டுக்கு இணையாக, போதைப் பொருள் ஒழிப்புக்கான இளைஞர் மாநாடொன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.**

இதுதொடர்பான முதற்கட்ட ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து இளந்தலைமுறையினரைப் பாதுகாப்பதற்கும்; போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிராக நாட்டின் இளைஞர்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக கிராமியமட்டத்தில் இளைஞர்களை ஒன்றிணைக்கும் நோக்கிலும் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்துக்கு இணையாக, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு, நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சு ஆகியன இணைந்து ஜூன் 26 ஆம் திகதி இந்த இளைஞர் மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன. (எ-இ)

## சட்டவிரோத சொத்து சேர்ப்பு விமல் வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, மே 23
முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக சட்டவிரோதமாக 75 மில்லியனுக்கும் அதிகமான சொத்துகளைச் சேர்த்தமை தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்துள்ள வழக்கின் மேலதிக சாட்சி விசாரணைகள் எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் விசாரணைக்குவந்தபோதே மேலதிக சாட்சி விசாரணைகளுக்காக எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டது. (ச-இ)

## 39 கிலோ ஐஸுடன் சந்தேகநபர் கைது!



கொழும்பு, மே 23
39 கிலோ ஐஸ் மற்றும் 5 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒரு சந்தேகநபர் ஒருவர் தெமட்டகொட பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். மேற்கு மாகாண வடக்குக் குற்றப்பிரிவுக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து மேற்கு மாகாண வடக்குக் குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகிறது. (ச-இ)

## ஆயுதத்தால் தாக்கி தம்பதியர் கொலை

கொழும்பு, மே 23
ஹற்றன் டிக்கோயா நகரில் தனிமையில் வாழ்ந்து வந்த வயோதிபத் தம்பதியினர் கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. இவ்வாறு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டவர்கள் வர்த்தகரான எஸ். காளிமுத்து சத்திவேல் (வயது82) மற்றும் அவரது மனைவியான சகுந்தலாதேவி (வயது 82) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். முன்னதாக நகை வர்த்தக நிலையமொன்றை நடத்தி வந்த இவர்கள் பின்பு வர்த்தக நிலையத்தை மூடி விட்டு அதன் பின்புறமாக இருந்த தமது வீட்டில் வாழ்ந்து வந்துள்ளனர். வீட்டில் கொள்ளையடிக்க வந்த எவராவது இந்தத் தம்பதிகளை கொலை செய்து விட்டு தப்பியோடியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

# வர்த்தகரைக் கடத்திச்சென்று 2 கிலோ தங்கம் கொள்ளை!

## 5 பொலிஸ் அதிகாரிகள் கைது

கொழும்பு, மே 23
100 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 2 கிலோகிராமுக்கும் மேற்பட்ட தங்கத்தைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட ஐந்து பொலிஸ் அதிகாரிகளை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அன்று அவர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் கொழும்பு மேலதிக நீதவான் தர்ஷிகா பிரேமரத்ன உத்தரவிட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்ட இந்தச் சந்தேகநபர்கள், முகங்கள் மூடப்பட்ட நிலையிலேயே நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்.

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதி இடம்பெற்றது என்று கூறப்படும் இந்தச்சம்பவம்தொடர்பில், சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. சம்பவம் நடந்த காலப் பகுதியில் சந்தேகநபர்கள் கொழும்பு வடக்கு பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றியுள்ளனர். அவர்கள் பொலிஸ் சீருடையில், ஒரு பணக்கார வர்த்தகரைக் கடத்தி, அவரைக் கொலை செய்வதாக மிரட்டி, அவரிடமிருந்த 2 கிலோகிராமுக்கும் அதிக தங்கத்தைக் கொள்ளையடித்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-இ)




## அள்ளிக் குடுங்கோ!

தனக்கில்லாம தானம் பண்ணக்கூடாது எண்டு சொல்லுவினம். ஆனால் சனத்துக்காக, இனத்துக்காகப் போராடப் போனவை அப்பிடியெல்லாம் தங்களுக்கெண்டு சொத்துப்பத்துச் சேர்க்காமல், உயிரைக்கூட தியாகம் செய்யிறம் எண்டுதான் ஆயுதம் தூக்கினவை. அவையை வைச்சு, அவையின்ர பேரை வைச்சு, அவையின்ர தியாகத்தை வைச்சு கனபேர் சொத்துசுகத்தோட இருக்கினம். ஆனால் சனத்துக்காகப் போராட வெளிக்கிட்டவையின்ர நிலை அப்பிடியில்லை. அதுக்கு ஆகப்பிந்தின உதாரணம், சிவாஜிலிங்கம்.

தன்னட்ட இருக்கிற சொத்துகளைக்கூட சனத்துக்காகக் குடுத்த மனிசன் அவர். எப்பவும் சனத்தின்ர, இனத்தின்ர நலனுக்காகத் துணிஞ்சு குரல் குடுக்கிற ஒரு 'விறைச்ச கட்டை'. ஆருக்கும் பயப்பிடாதவர். ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அவர் அரசியல்ரீதியாப் போராடேக்கையும் அதே துணிச்சல் அவரை விட்டுப் போகேலை. அதுவும் சண்டை முடிஞ்சபிறகு, முதலில அந்தாள் மட்டும் தான் ஆமிக்கு எதிராவும் அரசாங்கத்துக்கு எதிராவும் துணிஞ்சு நிண்டு குரல் குடுத்தவர். வெறும் வாய்ப்பந்தல் போடாமல் அதைச் செய்தும் காட்டினவர். தேசியத்தலைவர் செய்யவேண்டிய கடமையளை, அவரில்லாக் காலத்தில சிவாஜிலிங்கம் தான் செய்தவர். முக்கியமா தேசியத்தலைவரின்ர அம்மா பார்வதியம்மாவை சிகிச்சைக்காக சென்னைக்குக் கூட்டிக்கொண்டு போனது, அங்க கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசாங்கம் பார்வதியம்மாவுக்கு சிகிச்சைக்கு அனுமதி குடுக்காமல் அப்பிடியே எயார்ப் போட்டிலை வைச்சே திருப்பி அனுப்பேக்கயும் மனம் தளராமல் அவாவை இஞ்சையே கொண்டந்து ஊறணி ஆஸ்பத்திரியில வைச்சு பராமரிச்சது, அவா செத்ததும் ஒரு மகன் செய்யவேண்டிய கடமையை ஆமிக்காரரின்ர அச்சுறுத்தலுக்குள்ளையும் தனியாளா செய்து முடிச்சது எண்டு சிவாஜியரின்ர துணிச்சலுக்கு நிறையச் சம்பவங்களை அடுக்கலாம். மக்கள் நடத்திற போராட்டங்களில என்னதான் பொலிஸ் அடிச்சுக் கலைச்சாலும் நடு றோட்டில அப்பிடியே அசையாமல் இருந்து போராட வந்தவைக்கு நம்பிக்கை குடுப்பார். தேசியத்தலைவரின்ர பிறந்தநாளுக்கு எந்தத்தடை போடுப்பட்டாலும் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் தலைவரின்ர வீட்டுக்கு முன்னால கேக் வெட்டி, பலகாரங்கள் குடுத்துக் கொண்டாடாமல் சிவாஜிலிங்கம் இருந்ததில்லை. அந்தக் கேக், பலகாரத்துக்குக்கூட தன்ர வீட்டு நகைநட்டுகளை அடகுவைச்சுத்தான் காசு குடுத்தவர்.

அப்பிடி அப்பவும் இப்பவும் தன்னைப் பற்றியோ தன்ர குடும்பத்தைப் பற்றியோ யோசிக்காமல், சனத்துக்காகவும், எங்கட உரிமைக்காகவும் போராடின அந்த நல்லமனுசன் இப்ப முதல் முறையா தனக்காக ஒரு உதவி கேக்கிறார்.அவரின்ர உயிரைக் காப்பாத்த அவசரமா 80 இலட்சத்துக்குக்கிட்ட தேவை. ஆனால் அவரிட்ட கையில அந்தளவு காசில்லை. அதால எந்தச் சனத்துக்காக அவர் இவ்வளவுநாளும் போராடினாரோ அதே சனத்திட்ட உதவி கேக்கிறார். அப்பிடி அவர் உதவி கேட்டதும் சிலர் உடனேயே அள்ளிக்குடுக்கவும் முன் வந்திருக்கினம். ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா உடனடியா 10 லட்சம் ரூபாவை அனுப்பி இருக்கிறார். அவரை மாதிரி இஞ்சையுள்ளவையும், புலம்பெயர்நாடுகளில உள்ளவையும் சிவாஜிலிங்கத்தார் எங்களுக்காக இதுவரை செய்தவைக்காக அள்ளிக்குடுக்காட்டியும் கிள்ளிக் குடுத்தாலே அவருக்குத் தேவையான காசு வந்திடும். எங்களுக்காக உயிரையே குடுக்க முன்வந்த சிவாஜிலிங்கம் எண்ட உண்மையான போராளியின்ர உயிரைக் காப்பாத்திறதும் ஒரு தேசியக் கடமைதான் கண்டியளோ.

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாழ்ப்பாண மாவட்டத்தில்

# 12 பிரதேச செயலகங்களிலும் ஆயுள்வேத பாதுகாப்புச்சபை

யாழ்ப்பாணம், மே 23

**யாழ்ப்பாண மாவட்டத்தின் தொன்மையான ஆயுள்வேத மற்றும் சித்த வைத்திய மரபுகளைப் பாதுகாக்கவும், மூலிகை வளங்களை வளர்த்தெடுக்கவும் மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலகங்களிலும் தலா ஒரு 'பிரதேச ஆயுள்வேத பாதுகாப்புச்சபை' அமைக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச்சபையின் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலாளர் கே. சிவகரன் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மாவட்டச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச மற்றும் பாரம்பரியமாகப் பதிவு செய்யப்பட்ட 90 சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் தற்போது கடமையாற்றி வருகின்றனர்.

நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவிலேயே அதிகபட்சமாக 27 வைத்தியர்கள் இருக்கின்றனர். மருதங்கேணி மற்றும் காரைநகரில் தலா ஒரு வைத்தியர் மாத்திரமே உள்ளனர்.

எனினும், நெடுந்தீவுப் பிரதேசத்தில் தற்போதைக்கு நிரந்தரமான ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் இல்லை என்ற குறைபாடும் நிலவுகிறது.

இந்தநிலையில் மக்கள் ஆர்வத்தோடு இந்த மருத்துவ சேவையை நாடி வருவதாலேயே, கீழ்மட்டத்திலிருந்து இதனைப் பலப்படுத்த 12 பிரதேச செயலகங்களிலும் இந்தச் சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன- என்றார்.

யாழ். மாவட்ட ஆயுள்வேத பாதுகாப்புச்சபையின் தலைவராக கைதடி சித்த போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் பா. பிரபாகரன், உப தலைலராக வைத்தியர் டி. சபேசன், செயலாளராக வைத்தியர் இ. தில்லைவாசன், பொருளாளராக வைத்தியர் இ. கஜன் ஆகியோருடன் 12 பிரதேச செயலகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 12 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-இ)



சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீ ஞானவைரவர் பெருமானின் அலங்கார உற்சவம் கணபதி ஹோமத்துடன் அண்மையில் ஆரம்பமானது. (ச-17)





முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, கிளிநொச்சி முரசுமோட்டை வட்டார பொது அமைப்புக்கள் மற்றும் மக்கள் ஏற்பாடு செய்த இரத்ததான முகாம், முரசுமோட்டைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (க-113-சி)



## உடுப்பிட்டி மக்கள் வங்கி புதிய கட்டடத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், மே 23

மக்கள்வங்கி தனது யாழ். பிராந்திய உடுப்பிட்டி சேவைநிலையத்தை நவீன வசதிகளுடன் கூடிய புதிய இடத்துக்கு இடமாற்றம் செய்துள்ளது. அதன்படி உடுப்பிட்டி மக்கள் வங்கி சேவைநிலையம் இனிவரும் நாள்களில் இல. 10, வதிரி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி எனும் முகவரியில் தனது சேவைகளை முன்னெடுக்கும். புதிய கட்டட ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்தப் புதிய கட்டடத்தில் அதிநவீன டிஜிற்றல் வங்கிச் சேவை வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் கையளிப்பு



யாழ். உடுப்பிட்டி இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய நிர்வாகத்தின் கோரிக்கைக்கமைவாக பாடசாலையில் நிலவும் சுத்தமான குடி தண்ணீர்ப் பற்றாக் குறையைச் சீர்செய்யும் பொருட்டு சுத்திகரிக்கப் பட்ட புதிய குடிநீர் இயந்திரத் தொகுதி பொருத்தப்பட்டு கடந்த புதன்கிழமை மாணவர்களின் பயன்பாட்டுக்காக உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது. சந்நிதியான் ஆச்சிரமத்தினரின் ஐந்து இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதிப்பங்களிப்பில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளால் குடிநீர் இயந்திரத்தொகுதி வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர் சிவலிங்கம் லிங்கனதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (6-41-60)

ஸ்ரீ அம்மன் பட்டு சென்டர்
பழைய பட்டு புடைவை பணமாகிறது
தங்களிடம் உள்ள பழைய (கிழிந்த) காஞ்சிபுரம் பட்டு புடைவைகள், பட்டு வேஷ்டிகள், கூறை பட்டு புடைவகள், பட்டு பாவாடைகள், டிஷ்யு புடைவைகள், எந்நிலையில் இருந்தாலும், காஞ்சிபுரம் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.
ஞாயிறும் கடை உண்டு.
ஆரம்பத் திகதி 23.05.2026 முதல் 29.05.2026 வரை 7 தினங்கள்
இடம்: 68, முதலாம் வீதி, வவுனியா.
(Dialog Company அருகில், HNB Finance எதிரில்.)

தொடர்பு: 075 7628 189
பழைய கால்கொலுசுகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# அரிசியும், அநுரவும்..!

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப் பாட்டை நிவர்த்திசெய்யும் வகையில் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். வடமாகாணத்தில் உள்ள நெல் சந்தைப்படுத்தல் களஞ்சியசாலைகள் உட்பட, நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள களஞ்சியசாலைகளில் பல்லாயிரம் தொன் நெல் தேங்கிக்கிடக்கும் நிலையிலேயே அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானம் எடுத்திருக்கின்றது திசைகாட்டித் தரப்பு. அரிசி இறக்குமதி செய்யும் விடயத்தில் அநுர அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை எந்தக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாதது. வேளாண்மை மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் இந்த நடவடிக்கையை அரசாங்கம் மறுபரிசீலனை இன்றி உடனடியாகக் கைவிட வேண்டும்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 'எல் நி-னோவின்' தாக்கம் இலங்கையில் நீடித்தது. இதனால், தண்ணீர் இருப்பைக் கருத்திற்கொண்டு பயிர்ச்செய்கைக்கு மட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. இதன்விளைவாக ஏற்பட்ட அரிசித் தட்டுப் பாட்டை நிவர்த்திசெய்வதற்காக மியான்மர், பாகிஸ்தான் நாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. அப்போது எதிர்க்கட்சியில் இருந்த தற்போதைய ஆளுந்தரப்பினர் இந்த இறக்குமதியைக் கடுமையாகக் கண்டித்தனர். தற்சார்புப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்காக இந்த இறக்குமதி நடவடிக்கையை அரசாங்கம் கைவிட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். அதே தரப்பினர், இன்று ஆட்சியில் இருக்கும் வேளையில் அரிசியை இறக்குமதி செய்வதற்கு எத்தனிப்பதானது பிறழ்வான நடத்தை மட்டுமல்ல, வெட்கக்கேடான செயலுமாகும்.

அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் என்ன? எமது நாட்டின் விவசாயிகளிடம் அரிசி முறையான பொறிமுறை ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்டதா? இலங்கையில் விளைந்த அரிசியை விடவும் மேலதிகத் தேவை கருதியா இந்த இறக்குமதி இடம்பெறுகிறது? உள்ளிட்ட கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் விரைவாகவும், வெளிப்படையாகவும் பதில் வழங்கவேண்டும். எரிபொருள், எரிவாயுவை மையமாக வைத்து தோற்றம்பெறும் நெருக்கடிகளுக்கு அரசாங்கத்தை முற்றுமுழுதாகக் குற்றஞ்சுமத்திப் பயனில்லை. ஏனெனில் அந்த விடயங்களில் வெளிப்புறச் சக்திகளின் தலையீடும், செல்வாக்கும் அதிகம். ஆனால், ஓர் அரசாங்கமாக மிகச் சாதாரணமாக தன்னிறைவு காணக்கூடிய அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டமை நிபந்தனையற்ற தோல்வியின் வெளிப்பாடே.


நாட்டைத் தற்போது நெருக்கடிகள் சூழ்ந்து வரும் நிலையில், குறைந்த பட்சம் அரிசியிலாவது தன்னிறைவு கண்டிருந்தால் அது ஏதோவொரு நம்பிக்கையை ஆழ்மனதில் ஏற்படுத்தியிருக்கச் சாத்தியம் உள்ளது. ஆனால் சிந்தனைப் பிறழ்வான நிர்வாகத்தில் தன்னிறைவு காண்பதெல்லாம் இன்னும் பல தசாப்தங்களுக்குச் சாத்தியமற்ற விடயங்களே.



## பொய்யாமொழி

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்**

**பொருள்:** அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாதிருத்தல், பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்திவிடும்.



# நடப்பாண்டு வரி வருமானம் 1 டிரில்லியனுக்கும் அதிகம்

கொழும்பு, மே 23

நடப்பாண்டின் மே மாதம் 18ஆம் திகதி வரையில் ஒரு ட்ரில்லியன் ரூபாவுக்கு அதிகமான வரி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முறையான வரி வசூலிப்பு மற்றும் புதிய டிஜிற்றல் நிதி மேலாண்மை உத்திகள் காரணமாகவே மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் இந்த இமாலய இலக்கை எட்ட முடிந்துள்ளதாகத் திணைக்களத்தரவுகள் தெரிவிக்கின்றன. மே மாத நடுப் பகுதியிலேயே 1 ட்ரில்லியன் ரூபாய் வரி வருமானத்தை எட்டியுள்ளமை நாட்டின் நிதித்துறையின் ஆரோக்கியமான வளர்ச்சியை உணர்த்துகிறது. திரட்டப்பட்டுள்ள இந்த நிதி, நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவதற்கும், பொதுச் சேவைகளை எவ்வித தடையுமின்றி யில் வலுப்படுத்துவதற்கும் பங்களிப்பை வழங்கவுள்ளது என திணைக்கள உயர் மட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# ஓட்டோ கவிழ்ந்து 3 மாதக் குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, மே 23

முச்சக்கரவண்டி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 3 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளது. இந்தச்சம்பவம் நிட்டம்புவ ருவன்வெல்ல வீதியின் கோனகல பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்த பெண்ணும், அவரது குழந்தையும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் அவிசாவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஆயினும் 3 மாதமேயான பெண் குழந்தை உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துத் தொடர்பில் முச்சக்கரவண்டிச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

### ஏப்ரல் மாதத்தில்


# பணவீக்கம் இருமடங்கு

கொழும்பு, மே 23

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் தரவுகளின்படி, கடந்த ஏப்ரல் மாதத்தில் நாட்டின் முதன்மைப் பணவீக்கம் 4.7 சதவீதம் வரை கணிசமாக அதிகரித்துள்ளது எனத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் நிலவிய பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில், ஏப்ரல் மாதத்தில் பணவீக்க விகிதம் இரு மடங்குக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது. மார்ச் மாதத்தில் இந்த மதிப்பு 2.4 சதவீதமாக மட்டுமே பதிவாகியிருந்தது.

அதேபோல், உணவற்ற பிரிவின் பணவீக்கம் மார்ச் மாதத்தில் பதிவான 3.8 சதவீதத்திலிருந்து ஏப்ரல் மாதத்தில் 7.8 சதவீதம் வரை அதிகரித்துள்ளதே தேசிய பணவீக்கத்தின் உயர்வுக்கு முக்கியமான காரணியாக அமைந்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



# நுரைச்சோலை மின் நிலைய சூழல் பாதிப்பை ஆராயக்குழு

கொழும்பு, மே 23

புத்தளம் நுரைச்சோலை 'லக்விஜய' நிலக்கரி மின்நிலையத்தால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக ஆராய்வதற்கும், அவற்றைத் தடுப்பதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கும் நாடாளுமன்ற விசேட உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் சுற்றுச்சூழல், விவசாயம் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய உபகுழுவின் தலைமைப் பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான பாக்ய ஸ்ரீ ஹேரத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை மின்நிலையத்தின் கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில், சர்வதேச நாடுகளின் உதவியை நாட இந்தக் குழுவின் தலைவர் பரிந்துரைத்துள்ளார். (ச-இ)



நாளை ஞாயிற்றுக்கிழமை- வைகாசி 10
24.05.2026
சுபநேரம் : 08.52 - 10.22
ராகுகாலம் : 04.22 - 05.52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேச கப்பல் கட்டும் தளமாக சீ-நோரை மாற்றியமைக்கத் திட்டம்

**கொழும்பு, மே 23**
**தற்போதுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களைப் பயன்படுத்தி, சீ-நோரை நிறுவனத்தை, சர்வதேசமட்டத்திலான கப்பல் கட்டும் தளமாக மாற்றியமைப்பதே அரசாங்கத்தின் இலக்கு என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

மொரிஷியஸ் நாட்டின் தனியார் துறை நிறுவனமொன்றுக்காக, இலங்கையின் சீ-நோரை நிறுவனத் தால் தயாரிக்கப்பட்டுவரும் படகின் முன்னேற்றத்தைப் பார்வையிட்ட பின்னர் அவர் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

55 அடி நீளம் கொண்டதும், சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியானதுமான இந்த நவீன படகு, மிக விரைவில் மொரிஷியஸ் தரப்பிடம் ஒப்படைக்கப்பட வுள்ளது. சீ-நோரை நிறுவனம் சர்வதேச சந்தையை வெற்றிகொள்ளக் கூடிய ஆற்றலைக் கொண்ட ஒரு நிறுவனமாகும். வருடாந்தம் இவ்வாறான ஒரு படகு மாத்திரமே தயாரிக்கப்பட்டுவந்த நிலையை மாற்றி, உற்பத்தித்திறனை இரண்டு மடங்காக அதிகரிக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதற்காக நோர்வே நாட்டின் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்த மாதம் ஆரம்பத்தில் ஜப்பான் ஊடாக நவீன தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம்-என்றார். (க-இ)

## சீநோரை நிறுவனத்தின் ஊடாக ஏற்றுமதி வருமானம் உயரும்

கொழும்பு, மே 23
கடற்றொழில் அமைச்சின் 4 வருடங்கள் திட்டத்தின்கீழ், தற்போதைய 300 மில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை, 600 மில்லியன் டொலராக உயர்த்துவதற்கு சீ-நோரை நிறுவனம் கைகொடுக்கும் என்று நிறுவனத்தின் பதில் தலைவர் வசந்த மன்னப்பெரும தெரிவித்துள்ளார். மட்டக்குளி சீ-நோரை கப்பல்கட்டும்தளத்தின், முன்னேற்றப்பணிகளை, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் குழுவினர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர். இதன்போது ஊடகங்களுக்கு அவர் தெரிவித்ததாவது- இலங்கையில் மட்டக்குளி மற்றும் காரைநகர் பிரதேசங்களிலுள்ள இரு கப்பல் கட்டும் தளங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி, வருடாந்தம் 4 பெரிய படகுகளைத் தயாரிக்க எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான அந்நியச் செலாவணியை ஈட்டத்திட்டமிட்டுள்ளோம். இதற்காக சீ-நோரை நிறுவனம் முடிந்தளவு பங்களிப்பை வழங்கும்-என்றார். (க-இ)

## அறங்காவலர் தினவிழா

கிளிநொச்சி, மே 23
இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் நிறுவுநர் சின்னத்தம்பி நினைவாக கோவில் அறக்கட்டளையினர் நடத்தும் அறங்காவலர் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கோவில் சரண்யா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை கிராம அலுவலர் திருமதி குணரஞ்சிதம் பிரதாபராஜன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப் பள்ளிப் பிரதேசசபைத் தவிசாளர் சுரேன் சுப்பிரமணியம் கலந்துகொள்வார். நினைவுப்பேருரையினை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் நிகழ்த்துவார். (ச-9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 23
வட்டு- மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கத்தின் 93ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மூளாய் வீதியிலுள்ள சங்கக் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் த. நாராயணன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் மூத்த அங்கத்தவர்கள் கௌரவிப்பு, ஞாபகார்த்த பரிசில் வழங்கல், புதிய அங்கத்தவர்களை அங்கீகரித்தல் என்பவை நடைபெறவுள்ளன. எனவே அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மணி விழாவும் நூல்வெளியீடும்

யாழ்ப்பாணம், மே 23
யாழ். கைதடி விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் நாகலிங்கம் கருணாகரனின் மணி விழாவும் கருணாதீபம் நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலையின் உப அதிபர் த. முரளீதரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-66)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 23
சாவகச்சேரி - பெரிய மாவடி கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா எதிர்வரும் ஐந்தாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

உற்சவத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

பெருந்திருவிழா கிரியைகள் சிவஸ்ரீ பாகுலேய சயந்தன் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ச-9)

## வினாடிவினாப் போட்டி பரிசு வழங்கும் விழா!

யாழ்ப்பாணம், மே 23
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை மறைந்த திருமதி சௌபாக்கியவதி ராஜரத்தினம் மற்றும் மறைந்த திருமதி பத்மபாஷினி செல்வஸ்கந்தன் ஆகியோரின் நினைவாக நடத்தப்பட்ட 'மகாஜனன் வினாடி வினாப் போட்டி 2025' இன் பரிசு வழங்கும் விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மகாஜனக் கல்லூரி பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் ஆர். புஷ்பரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு மருத்துவ அதிகாரி கே. இளங்கோ ஞானியார் பங்கேற்கவுள்ளார். (ச)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக் கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும்.

**மிதுனம்:** திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படலாம். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். மற்றவர்களிடம் வீண் விவாதத்தில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத சோர்வு உண்டாகலாம்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். வேலை விஷயமாக சிலர் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். எதிரிகள் பணிந்து போவார்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். கணவன் -மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.


**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மணி விழா வாழ்த்து

## உயர் திரு. நாகலிங்கம் கருணாகரன்

### அதிபர்
### யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்





**மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி**

**திரு.யோ.ஜெயச்சந்திரன்,**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.
மாகாணக் கல்வித் திணைக்களம்.
வடக்கு மாகாணம்.

**மணிவிழாக் காணும் யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் அதிபர் திரு.நாகலிங்கம் கருணாகரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.**

திரு.நா.கருணாகரன் அவர்கள் ஆசிரியர், அதிபர் எனக் கல்விப் பணியாற்றி ஓய்வு பெறுகின்றார். கல்வி மற்றும் தொழில் தகைமைகள் பலவற்றைத் தனதாக்கிய இவர் தனது பணிக்காலத்தில் பல்வேறுபட்ட கல்விசார் செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டதுடன் ஏனைய பணிக் குழுவினருக்கும் தமது பணிகளை நிறைவேற்ற உரிய ஒத்தாசை களினையும் வழங்கி ஆசிரிய மாணவ ஆளுமை விருத்திக்கும் கல்விசார் உயர்ச்சிக்கும் தன்னாலான உயரிய பங்களிப்புக்களை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் இலங்கை சாரணிய சங்கத்தினால் வழங்கப்படும் விருதான சாரணிய தரு சின்னத்தைப் பெற்றுக் கொண்டமை இவரது சமூகம்சார் பணிச்சிறப்பினை வெளிப்படுத்தி நிற்கின்றது. முப்பத்து எட்டு வருடங்களுக்கு மேலாகக் கல்விப்பணியாற்றி ஓய்வுபெறும் இவருடைய ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.



**மணிவிழா நாயகனிற்கு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை**

**திரு.கி.கமலராஜன்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி.

எமது கல்வி வலயத்தின் ஆளுகைக்குட்பட்ட தரம் 11 பாடசாலைகளில் ஒன்றான யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி 24.05.2026 இல் மணிவிழா காணும் திரு நாகலிங்கம் கருணாகரன் அவர்களிற்கு வாழ்த்துரைப்பதில் அகமிக மகிழ்வடைகின்றேன். இவர் தென்மராட்சி மண்ணில் பிறந்து வளர்ந்து இப் பிரதேசத்திலேயே உயர்தரம் வரை கற்று தன் கல்விப் பணியினைத் தொடரும் பாக்கியம் பெற்றவர். யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியைத் தொடங்கிய இவர் 37 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியராகவும் அதிபராகவும் கல்வித் துறைக்கு பணியாற்றியுள்ளார். வர்த்தக ஆசிரியராகப் பயிற்றப்பட்ட இவர் கலைமாணி, கல்விமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா, முதுகல்விமாணி, உளவியல் டிப்ளோமா ஊடாகத் தன்னை வளர்த்துக் கொண்டு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நல்வழி காட்டியுள்ளார். இலங்கை சாரணிய சங்கத்தின் சாரணிய தரு சின்னம் பெற்ற சேவையாளர்.

நாகலிங்கம் பெற்றெடுத்த நன்முத்தே
கலைமகளாம் சரஸ்வதிக்கு மகன் என்பதனாலோ
கல்வியலில் பட்டங்கள் பல பெற்று
காத்திரமாய் பணிபுரிந்தீர்
அகவை அறுபது என்பது அரசபணிக்கு மட்டுமே ஓய்வு
குன்றாத இளமையுடன் வலம் வரும் உமக்கு
என்றென்றும் வயது பதினாறே
எண்ணிய யாவும் எளிதினில் கைவர
புண்ணியமூர்த்தி கடாட்சம் பெற்று
புவியினில் சிறப்புடன் பூரிப்பாய் வாழ்கவென
வாழ்த்துகின்றேன் வாழியவே!



**வாழ்த்துச் செய்தி**

**திரு.F.C.சத்தியசோதி,**
பிரதேச செயலாளர்.
பிரதேச செயலகம், தென்மராட்சி.

தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிறப்பான பாடசாலைகளில் ஒன்றாக யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம் அமையப் பெறுகின்றது. இப்பாடசாலையில் காலத்திற்குக் காலம் பல அதிபர்கள் தங்கள் கல்விச் சேவையினை வழங்கிச் சென்றுள்ள போதும் திரு.நாகலிங்கம் கருணாகரன் அவர்களால் இப்பாடசாலைச் சமூகத்திற்கு ஆற்றிய கல்விச் சேவை காத்திரமானது என்றே கூறலாம். அவர் 2026.05.24 ஆம் திகதி அரச கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவரின் காத்திரமான சேவைதனைப் பாராட்டி வெளியிடுகின்ற மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். ஆற்றலும் ஆளுமையும்மிக்க திரு.நாகலிங்கம் கருணாகரன் அவர்கள் ஆசிரியராகக் கல்விச் சேவைக்குள் நுழைந்து இருபது வருட ஆசிரிய அனுபவம் மற்றும் சிறந்த தலைமைத்துவப் பண்பினாலும் அதிபர் சேவைக்குள் காலடி எடுத்துவைத்து அளப்பரிய கல்விச் சேவையினை ஆற்றியுள்ளமை பாராட்டத் தக்க விடயமாகும். தன்னலமே கண்ணாயிருக்கும் இந்நாளில் அர்ப்பணிப்பு மிக்க அதிபர் சேவையினை வழங்கிய செயற்திறன் மிக்க அதிபராக இப் பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கண்டிப்பாகவும் அன்பாகவும் அணுகி பாடசாலையின் சிறப்பான வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளார். அதிபரின் சிறப்பான கல்விச் சேவையினைப் பறை சாற்றுவதாகப் பாடசாலையின் பௌதிக மற்றும் கல்வி அடைவுமட்டப் பெறுபேறுகள் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. மணிவிழா நாயகன் பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றாலும் தனது கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறமாட்டார் என்றே கருதுகின்றேன். ஒருவர் வாழும் போதே அவரின் திறமைகளைப் பாராட்ட வேண்டும். அவ்வகையில் உயர்ந்த ஆற்றலும் ஆளுமையும் மிக்க அதிபர் ஒருவரிற்கு மணிவிழா மலர் வெளியிடப்படுவதனையிட்டு மிகுந்த மனநிறைவடைவதுடன், குறித்த மணிவிழா மலர் சிறப்பாக வெளிவரவும் திரு.நாகலிங்கம் கருணாகரன் அவர்களின் சேவைகள் கல்விச் சமூகத்திற்கு நீண்ட காலம் தொடர இறைவனின் திருவருள் நிறைவாகக் கிடைக்க வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



**மணிவிழா நாயகனுக்கு மகத்தான வாழ்த்துக்கள்**

**திரு.க.முரளீதரன்,**
தலைவர், ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்.

மணிவிழாக் காணும் பெருமைக்குரிய எமது அதிபர் திருவாளர் நாகலிங்கம் கருணாகரன் அவர்களை மணிவிழா நன்நாளில் வாழ்த்தி வாழ்த்துரை வழங்கு வதையிட்டு அகமகிழ்வடைகின்றேன். தலைமைத்துவம் என்பது ஆளுக்காள் வேறுபடும் இயல்புடையது. ஒருவரின் நடை, உடை, பாவனை, சொல், செயல், சிந்தனை என்பன பிறரில் செலுத்தும் செல்வாக்கு அவருடைய தலைமைத்துவத்தினை மற்றவர்களில் அவர்களையறியாமலேயே பிரயோகம் செய்து செல்வாக்கினை ஏற்படுத்தி அவர்களையும் ஆட்கொண்டு விடுகின்றது. அவ்வாறே அதிபரின் முன்மாதிரி நடத்தைகள் அவரைச் சார்ந்திருப்போரில் மேவி நிற்பதைக் காணலாம். மாணவர்களின் நலனில், கல்வி நடவடிக்கைகளில், ஒழுக்கம் சார்ந்த விடயங்களில் அதீத அக்கறையுடையவராக எல்லாவற்றையும் ஆய்வுக் கண்கொண்டு நோக்கி மாணவர்களின் எதிர்காலம் தொடர்பாகத் திட்டமிட்டு வாய்ப்புக்களையும் வசதிகளையும் பெற்றுக்கொடுத்து நடைமுறைக்குச் சாத்தியமான ஆலோசனைகளை முன்வைத்து நெறிப்படுத்தி வெற்றிகண்டவர். அதுமட்டுமன்றி பாடசாலை நிகழ்வுகளின் போது அதிபர் எனும் நிலை மறந்து தானே திட்டமிட்டு ஒழுங்கமைத்து முன்னின்று செய்வதில் சாமர்த்தியமானவர். ஆசிரியர்களை அன்பாக அரவணைத்து நுட்பமாக வேலைகளைப் பகிர்ந்தளிப்பதில் திறமைசாலி. எந்தவொரு விடயத்தையும் நேர்மையான எண்ணத்துடன் பாடசாலைச் சமூகத்தை ஒன்றிணைத்து சரியாகச் செய்து முடிக்கும் இவரது ஆற்றல்களையும் ஆளுமையையும் கண்டு நான் பல சந்தர்ப்பங்களில் வியந்திருக்கின்றேன். தாய் - நிலம், தகப்பன் - விதை, குரு - பசளை என்பார்கள். அந்த வகையில் நல்லதொரு குருவாக இருந்து ஆசிரியர்களதும் மாணவர்களினதும் திறன் மனப்பாங்குகளில் மாற்றத்தின் பதிவினை ஏற்படுத்திய அன்புக்குரிய அதிபர் திரு.நா.கருணாகரன் அவர்கள் தனது ஓய்வு காலத்தில் எண்ணம் போல் வாழ்வமைந்து குடும்பத்தினருடன் நீண்ட காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசீர்வாதம் வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**சேவை விபரம்**

| இல. | பாடசாலை | பதவி | காலம் | |
|---|---|---|---|---|
| | | | From | To |
| 1 | யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம் | ஆசிரியர் | 17.08.1988 | 14.05.1991 |
| 2 | யா/தனங்கிளப்பு அ.த.க.பாடசாலை | ஆசிரியர் | 15.05.1991 | 26.01.1992 |
| 3 | பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | ஆசிரியர் | 27.01.1992 | 31.12.1993 |
| 4 | யா/மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை | ஆசிரியர் | 01.01.1994 | 16.02.1997 |
| 5 | யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம் | ஆசிரியர் | 17.02.1997 | 01.07.1999 |
| 6 | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் | ஆசிரியர் | 02.07.1999 | 24.05.2009 |
| 7 | யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம் | ஆசிரியர் | 25.05.2009 | 04.12.2011 |
| 8 | யா/கைதடி கலைவாணி வித்தியாலயம் | அதிபர் | 05.12.2011 | 08.06.2016 |
| 9 | யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம் | அதிபர் | 09.06.2016 | To date |

வாழ்த்துவோர்: பாடசாலை சமூகம்
யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்.



**கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதல்வர் செந்தமிழ்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை**

**திரு.சந்திரமௌலீசன் லலீசன்,**
முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

அன்பிற்கினிய நண்பன் நாகலிங்கம் கருணாகரன் அவர்கள் தென்மராட்சி மீசாலை பங்களா வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நான் சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவன். இதனால் சிறுவயது முதலே அதிபர் கருணாகரனை நன்கு அறிவேன். பாடசாலையிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் வணிகக் கல்வியை கற்பிக்கும் பிரபல ஆசிரியராக கருணா விளங்கினார். இவரது சகோதரர் பௌதிகவியல் சார்ந்த சிறந்த ஆசிரியர் ஆவார். இவ்வாறு இவர்கள் தங்கள் இளமைக்காலத்தில் கல்விச் சேவையை திறம்பட ஆற்றியவர்களாகப் பலராலும் அறியப்பட்டனர். நிதமும் தேடல் மிக்க கல்வியாளராகக் கருணாவைக் காண்பேன். உலக விடயங்களை விரல் நுனியில் அறிந்து வைத்திருப்பார். இவரது அதிபர் சேவைக்காலம் பெரும்பாலும் கைதடிப் பிரதேசப் பாடசாலைகளான கலைவாணி வித்தியாலயம் மற்றும் விக்கினேஸ்வர வித்தியாலயம் என்பவற்றில் அவரது சேவை அமைந்தது. கருணாவின் அன்பான அழைப்பை ஏற்று அவர் முன்னெடுக்கும் நிகழ்வுகளில் நானும் கலந்துகொள்வதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் என்னை முதன்மைப்படுத்தி திரு கருணா பெருமைப்படுத்துவதுண்டு. விக்கினேஸ்வர வித்தியாலய நுழைவாயில் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக அழைத்தார். அவரது மகள் கிருஷ்ணிகாவின் அரங்கேற்றம் எனது தலைமையில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்றது. கருணாவின் வெற்றிகளுக்கு பின்புலமாக விளங்கும் அவரது மனைவி கலாநிதி நவதர்ஷனி கருணாகரன் அவர்களையும் பாராட்ட வேண்டும். சிறந்த குடும்பத் தலைவராக பாடசாலைத் தலைவராக சமூக ஆளுமையாக விளங்கும் திரு கருணாகரன் அவர்களின் கல்விப் பணிகளுக்கு எங்கள் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஓய்வுக்காலம் இனிதாக அமைய எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**ஆசியுரை**

**சிவஸ்ரீ.இ.புஸ்பராசா குருக்கள்,**
பிரதமகுரு, கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்

எமது கிராமத்தில் பல பாடசாலைகள் உள்ளன அதில் சிறந்த பாடசாலையாக விளங்குவது கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம். இப்பாடசாலையில் பல ஆண்டுகளாக அதிபராகக் கடமை புரியும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர் திரு நாகலிங்கம் கருணாகரன் அவர்கள். இவர் மீசாலை எனும் அழகிய ஊரைப் பிறப்பிடமாக கொண்டவர். பாடசாலை வளர்ச்சியில் சகல வழங்களையும் நிறைவு செய்வதில் அக்கறை செலுத்தும் முகமாக பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினூடாக பாடசாலையில் அபிவிருத்தித்திட்டங்களையும் நிறைவேற்றி மாணவர் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு அரும் பணியாற்றியவர். அது மட்டுமல்லாது விளையாட்டுத் துறை, ஆலய வழிபாடு போன்றவற்றிலும் பாடசாலை சமூகத்தை ஈடுபடுத்தியவர். தன் நலம் கருதாது பாடசாலை முன்னேற்றத்தையும் மாணவர்களின் கல்வியையும் நினைவில் கொண்டே உலா வருபவர். இவரின் காலத்தில் மாணவர் கல்வியில் சீரும் சிறப்பும் பெற்று வருகிறார்கள். பரீட்சையில் அதிக புள்ளி பெற்ற மாணவர்களை ஊக்குவிப்பார். 24.05.2026 அன்று பணிஓய்வு பெறுவது கல்வி சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக இருந்தாலும் அவருடைய நற்பணிக்கு நன்றிகூறி திரு.கருணாகரன் அதிபர் அவர்கள் குடும்ப சகிதம் பல்லாண்டு காலம் வாழ்க வையகத்தில் என்று கைதடி வீரகத்தி விநாயகர் ஆசிகூறி அமர்கின்றேன். மண்ணில் நல்லவண்ணம் வாழ்க!



**வாழ்த்துச் செய்தி**

**திருமதி.றொகான் தித்தியா,**
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்.

பயிலும் மாணவர்களின் சிந்தனையில் புதிய வெளிச்சத்தையும் ஆசிரியர்களின் பணியில் வழிகாட்டுதலையும் பாடசாலையின் வளர்ச்சியில் அர்ப்பணிப்பையும் வழங்கி நிற்கும் எமது பாடசாலை அதிபர் மதிப்பார்ந்த திரு நாகலிங்கம் கருணாகரன் அவர்களிற்கு அன்பு கலந்த வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பாடசாலை வளர்ச்சியை ஒரு பூங்காவனமாகவும், வகுப்பறைகளை அறிவின் கருவூலமாகவும் மாற்றும் உங்களின் தலைமைத்துவ ஆற்றல் போற்றத்தக்கது. கல்வி மட்டுமல்லாது ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் மாணவர் மனதில் விதைத்து சிறந்த பிரஜைகளை உருவாக்குவதில் நீங்கள் காட்டும் அக்கறை சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றுத்தந்துள்ளது. பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்ற காலத்தில் வளக்குறைபாடுகள் இருப்பினும் உள வலிமையுடன் மாணவர்களைக் கற்கத்தூண்டி கல்வியில் சாதிக்க வழிகாட்டும் வழிகாட்டல் சிறப்பாய் இருந்தது. மேலும் பழைய மாணவர்களின் அனுசரணைமூலம் பாடசாலைக்கு அவசியம் தேவையான பௌதிக வழங்களையும் பெற்று சமூகத்தின் பல்வேறு தளங்களின் பங்களிப்பு செய்யும் ஆளுமைத் திறன் கொண்ட நீங்கள் வருங்காலங்களிலும் சிறந்த கல்விப் பணியை ஆற்றி மேலும் கீர்த்தி சேர்க்க வேண்டும். இறைவனின் பேரருளால் உடல் ஆரோக்கியத்துடனும் மன உறுதியுடனும் உங்கள் குடும்பத்தினருடன் சந்தோசமாக நீடூழி வாழ்ந்து கல்விப் பணியில் மேலும் பல சாதனைகளை நிலைநாட்ட வாழ்த்துகின்றேன்.



**மணிவிழாக் காணும் பெருந்தகை**

**திரு.மு.பத்மரூபன்,**
செயலாளர், பழைய மாணவர் சங்கம்
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்.

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நிறைவுறு சேவையாற்றி மணி விழாக்காணும் அதிபர் திரு.நா.கருணாகரன் அவர்களின் கடமைகளும் சேவைகளும் அவர் பயணித்த பாதைகள் என்றென்றும் நன்றி மறவாது. ஒரு சிறு புள்ளியில் இருந்து ஆரம்பமாகிய இவரது வாழ்வின் பாதச் சுவடுகள் பரந்து விரிந்த ஓர் உலகை நோக்கிப் பெயர்த்துச் செல்வதை காண முடிகின்றது. தென்மராட்சியின் பெருமைக்குரிய பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 2016.06.09 அன்று அதிபராக கடமையேற்ற நாள் முதல் பாடசாலையில் பற்றும் பாடசாலையினை அனைத்து வழிகளிலும் முன்னேற்ற வேண்டும் என ஆர்வமும் அக்கறையும் கொண்டு அதற்கேற்ற ஆளுமையினையும் முகாமையினையும் கொண்டு சேவையாற்றி அகவை அறுபதை காணும் அதிபர் போற்றுதற்குரியவர். தேசிய பரீட்சைகளில் உயர்பெறுபேறு பெற்று கல்வி அபிவிருத்திப் பாதையிலும் இணைப்பாட விதானம் சார்ந்த சகல செயற்பாடுகளிலும் மாணவர்கள் முன்னேற்றமடைய வழிகாட்டி பணியாற்றியமையும் பாடசாலை வாயிலில் வானுயர்ந்த அழகியதோர் தோரண வாயில் அமையப்பெற்றமையும் பாடசாலையில் இடம்பெற்ற பௌதீகம் சார்ந்த அபிவிருத்திகள் அனைத்தையும் வெளிக்கொணர்கின்றதனை காணமுடிகின்றது. சவால்களும் போட்டிகளும் நிறைந்த கல்விச் சூழலிலும் சமூகச் சூழலிலும் பாடசாலையினை பொறுப்பெடுத்து ஆசிரியர்களூபவ் கல்விசாரா பணியாளர்களூபவ் பழைய மாணவர்களூபவ் பெற்றோர்கள் அனைவருடனும் மனித நேயத்துடன் பழகுவார். பட்டம் பதவிகளினால் பெருமையடையாது எளிமையாக பழகும் சுபாவம் கொண்டவர். கருணையுள்ளம் கொண்ட கருணாகரன் அதிபர் தனது சேவைக் காலத்தில் நிறைவான சந்தோசத்துடன் ஓய்வு பெற்றுச் செல்லும் எம் அதிபரை பழைய மாணவர்கள் சார்பில் மனதார வாழ்த்துவதோடு தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடன் வாழ எல்லாம்வல்ல வீரகத்திப் பிள்ளையார் திருவருள் புரிவாராக.

(CS/31842) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
2028 BATCH கலைப்பிரிவு ஆரம்பமாகவுள்ளது.
தமிழ் - கரன். வரலாறு - லக்ஷன்.
மீடியா - சங்கீர்த்தனா. பிரபல ஆசிரியர்கள்
குபேரன் கட்டடம். சங்கானை.
Tel: 077 675 1649
(cs.61490) (N-1)

# மரணப் பொறியில் வீழ்கிறது நாடு முன்னாயத்தப்பொறிமுறைதேவை!

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 23

அரசாங்கம் பொருளாதார நெருக்கடி இல்லை என்று கூறி வந்தாலும், சந்தை நிலைவரம் முற்றிலும் மாறாக உள்ளது. இறுதி நேரத்தில் நாட்டுக்குப் பாதகமான நிபந்தனைகளுக்கு அடிபணிவதைவிட, இப்போதே ஐ.எம்.எப். உடன் அடுத்த கட்டத்தொடர் வேலைத்திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் செல்லவேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் மீதான பிரேரணை விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய கடன் நீடிப்புத்திட்டம் 2027 மார்ச் மாதத்துடன் முடிவடையவுள்ள நிலையில், அதற்குப் பிறகு நாடு சந்திக்கவுள்ள 'இமாலய கடன் மலையை' எதிர்கொள்ள அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் இல்லை.

2027 மார்ச் மாதத்தில் ஐஎம்எஃப் திட்டம் முடியும் போது எமது கையிருப்பு 14.2 பில்லியன் அமெரிக்க டொலராக இருக்கவேண்டும் என்பதே சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கு.

ஆனால், தற்போது எமது கையிருப்பில் இருப்பது 7 பில்லியன் டொலர் மட்டுமே. அதிலும் பயன்படுத்தக்கூடிய இருப்பு மிகக்குறைவு.

இந்த 14.2 பில்லியன் டொலர் இலக்கை அடையவேண்டுமாயின், எதிர்வரும் 12 மாதங்களில் ஒவ்வொரு மாதமும் தலா 600 மில்லியன் டொலர் வீதம் நாம் கையிருப்பில் சேர்க்கவேண்டும். ஆனால், தற்போது எமக்கு மாதத்துக்கு 60 மில்லியன் டொலர் மட்டுமே கிடைத்து வருகின்றது. இதற்கான வாய்ப்பு 0% ஆகும்.

2027 ஆம் ஆண்டு முதல் நாம் வட்டிக்கு மேலதிகமாகக் கடனையும் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். ஆண்டுதோறும் 3 முதல் 4 பில்லியன் டொலர் வரை வட்டிக்கு மேல் கடனாகச் செலுத்தவேண்டும். நாடு ஒரு பெரும் மரணப் பொறிக்குள் சென்றுகொண்டிருக்கிறது.

இலங்கை ரூபா ஒரே வாரத்தில் 9.2% வீழ்ச்சியைக் கண்டுள்ளது. உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்று 110 டொலரைக் கடந்துள்ளதால், இந்த ஆண்டு ஜனவரி முதல் மே வரை உள்நாட்டில் பெற்றோல் விலை 39% ஆல் அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை 25 வீதம் கூடினாலே கொடுப்பனவுச் சமநிலை பாதிக்கப்படும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். எனவே, அரசாங்கம் இந்த நிதர்சனத்தை உணர்ந்து உடனடியாகச் செயற்பட வேண்டும். அரசாங்கம் நாடாளுமன்றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து அவசரமாக விவாதிக்க வேண்டும் - என்றார். (ச-இ)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
நீங்கா நினைவலைகள்
3 ஆம் ஆண்டு 36 ஆம் ஆண்டு
தோற்றம் 25.04.1940
மறைவு 27.05.2023


தோற்றம் 07.02.1947
மறைவு 29.08.1990
நடராசா கதிரவேலு (தம்பு)
திதி: வைகாசிமாத வளர்பிறை - ஸப்தமி
கதிரவேலு இராஜேஸ்வரி
திதி: ஆவணி மாத வளர்பிறை - நவமி
ஆண்டுகள் பல ஆனாலும்
கலையாத உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்திக்காக
வேண்டுகின்றோம் பிள்ளைகள் நாம்
79, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
நீங்காத நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

கேள்விஅறிவித்தல் 2026
யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்
கடைகளுக்கான

இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 23.05.2026 தொடக்கம் 06.06.2026 வரை யாழ்ப்பாணத்தில் உள்ள எமது சமாசத்தின் கீழ் காணப்படும் கடைகளை வாடகைக்கு விடுவதற்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்.

- **கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி** :- 25.05.2026- 05.06.2026
- **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிதிகதி** :- 06.06.2026 மு.ப 10.15 மணிவரை
- **கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி** :- 06.06.2026 மு.ப 10.30 மணி
- **கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம்** :- தலைமை அலுவலகம் சமாசம்

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு **"தலைவர், பெறுகைக்குழு யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல 95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்குமுன்னதாக இடப்படல் வேண்டும்.

- மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்ககூடியவைப்பு பணம் என்பவற்றை சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் பணமாக செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். தேசிய அடையாள அட்டை, அதன்பிரதி மற்றும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் என்பவற்றுடன் விண்ணப்பதாரி நேரடியாக சமூகமளிக்கவேண்டும்.
- ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்விவைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது. என்பதுடன் கேள்விதாரரின் பெயர் "தவறுனர்" பட்டியலில் சேர்க்கப்படும்.
- கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ இயக்குனர் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
- தெரிவுசெய்யப்படும் கேள்விதாரர் சித்தி பெற்ற கேள்வித்தொகையின் முழுத்தொகையையும் 31.08.2026ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சமாசத்துடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ளல் வேண்டும்.
- கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமூகமளிக்கலாம்.
- கேள்விதாரர் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.
- கேள்வி சித்திபெறாத கேள்விதாரர்களின் கேள்விவைப்புபணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
- மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

மூன்றுஆண்டுகளுக்கான கடை வாடகைஅட்டவணை

| தொ. இல | விபரம் | முற்பணம்-நிலையானது | ஆகக்குறைந்த கேள்வித்தொகை - மாதவாடகை | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாதகேள்விப் படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கடைஇல-02(கீழ்தளம்) | 3,000,000.00 | 100,000.00 | 20,000.00 | 5,000.00 |
| 02 | கடை இல–05 (மேல் தளம்) | 2,000,000.00 | 60,000.00 | 20,000.00 | 5,000.00 |
| 03 | கடை இல–06 " | 2,000,000.00 | 60,000.00 | 20,000.00 | 5,000.00 |
| 04 | கடை இல–07 " | 2,000,000.00 | 60,000.00 | 20,000.00 | 5,000.00 |
| 05 | தடை இல–08 " | 2,000,000.00 | 60,000.00 | 20,000.00 | 5,000.00 |
| 06 | கடை இல–05&06 " | 3,000,000.00 | 100,000.00 | 20,000.00 | 5,000.00 |
| 07 | கடை இல–07&08 " | 3,000,000.00 | 100,000.00 | 20,000.00 | 5,000.00 |

**தலைவர்,**
**யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்,**
**இல. 95, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**
(cr.47574)(N-1)
தொ.பே. 021 222 2639

# பாதாளக்குழுவினர் 21பேர் நாட்டுக்கு!

கொழும்பு, மே 23

டுபாயில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 21 பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் நேற்று அழைத்துவரப்பட்டுள்ளனர்.

நிலவும் காலநிலை காரணமாக, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்கு வருகை தரவிருந்த பல விமானங்கள் மத்தள ராஜபக்ச சர்வதேச விமானநிலையத்திற்கு திருப்பிவிடப்பட்டிருந்தது.

குறித்த விமானங்களில் சிலவற்றிலேயே இந்த சந்தேகநபர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்தப் பாதாள உலகக்குழு உறுப்பினர்களில் மஹறவத்தே சாமர மற்றும் குடு துமிந்த ஆகியோரும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

சிறிய ரக கூலர் (Cooler) வாகனம் தேவைப்படுகின்றது

பால் உற்பத்தி பொருட்கள் விநியோகத்திற்கான சிறிய ரக கூலர் (Cooler) வாகனம் மாதாந்த வாடகை அடிப்படையில் தேவைப்படுகிறது.
தொடர்புகளுக்கு:
* 021-223-2673 , 077-007-5929
*வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, முதியோர் இல்ல வளாகம். கண்டி வீதி, கைதடி யாழ்ப்பாணம்.
மனித வள முகாமையாளர்
NCDB
(Cr.47580) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெடியகாட்டில் குருதிக்கொடை

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் ஏற்பாட்டில், 86ஆவது குருதிக்கொடை முகாம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3 மணி வரை வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறும். பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கியில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் நோக்கில், ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த முகாமில், குருதிக் கொடை வழங்கும் அனைவரையும் கௌரவிக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. குருதிக் கொடை வழங்க ஆர்வமுள்ளவர்கள் 0779911131எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, முற்பதிவு செய்ய முடியும் என்று வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத் தலைவர் பா.வீரசுரேந்திரன் அழைப்புவிடுத்துள்ளார். (க-66-சி)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 02 . 1950

மறைவு 20 . 05 . 2021

### அமரர் இந்துமதி நடேசு

**திதி: வளர்பிறை அட்டமி (23.05.2026)**

அம்மா நீங்கள் எமைப் பிரிந்து சென்று ஐந்து ஆண்டுகள்
கடந்து சென்றாலும் எங்கள் கண் முன்னே
உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து விண் நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாது உங்கள் அன்பின் நினைவுகள்...

381, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.31831 (N-1)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 19 . 09 . 1947

இறப்பு 26 . 05 . 2023

### அமரர் இராமு நவரட்ணம்


தீராத துயரினைத் தந்து மீளாத் துயிலில்
ஆழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் மறைந்து ஆண்டு மூன்று
கழிந்தாலும் மாறாது உங்கள் நினைவுகள்
வேதனையால் தவிக்கின்றோம்
உங்கள் அன்பும் பாசமும்
எங்களை வாழ வழிகாட்டும்
நம்பிக்கையுடன் வாழ்கின்றோம்.

சுன்னாகம்.

(CS/61478) J-1

பிரிவால் துயருறும்
உங்கள் அன்பு மனைவி

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 03 . 1956

மறைவு 30 . 05 . 2020

### அமரர் ஆறுமுகம் உருத்திரமூர்த்தி

**திதி: அஷ்டமி (23.05.2026)**

சுதுமலை அம்மன் கோவிலின்
நிரந்தர தொண்டனாய்
அடியார்களுக்கு அடியவர் ஆனாய்
அம்பாளுக்கு ஓர் அபிராமிப்பட்ட ரானாய்
நான் பார்த்த முதல் முகம்
நான் பேசிய முதல் வார்த்தை
நான் மறக்க முடியாத முதல் ஓவியம் என் தெய்வமே!
ஆறு ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகளைச்
சுமந்தவளாய் இருப்பேன் தெய்வமே!
என் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும்
உங்களை என் உள்ளத்தில் வைத்து பூசிப்பேன் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

ஆருயிர் மனைவி - உருத்திரமூர்த்தி பவானி (ஆசிரியர்)
பா.குமரன், பா.நந்தன், பா.பிரணவன், பெறாமக்கள்,
மருமக்கள்,- நிஷாங்கரி, ...
பேரப்பிள்ளைகள் - ஆரேகனா, ...

சுதுமலை வடக்கு,
சுதுமலை.

## மரண அறிவித்தல்



பிறப்பு 16 . 03 . 1950

இறப்பு 22 . 05 . 2026

### மகேஸ்வரி கதிர்காமநாதன்

வரணி இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், கரம்பைக்குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி கதிர்காமநாதன் அவர்கள் 22.05.2026 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா இராசபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், இராசேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேந்திரா, விக்கினேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், துளசி, ரங்கநாதன் (சுவிஸ்), மைதிலி (ஆசிரியர்-கொ/விவேகானந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்தராசா (விரிவுரையாளர்-யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), குமுதினி (சுவிஸ்), பிரஜீத் (அதிபர் கொ/சென்மேரிஸ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆரபி, டினூஜன் (கனடா), ஆதவன் (பிரான்ஸ்), ஆரணன் (சுவிஸ்), ஆதினன்(சுவிஸ்), ஆத்மிகா (கொழும்பு), அபூர்வா (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து முள்ளி இந்து மயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பருத்தித்துறை வீதி,
... கிழக்கு,
...

தகவல்:
குடும்பத்தினர்

(cs 61490) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெடுந்தீவு போக்குவரத்தை சீர்படுத்தக் கோரிக்கை

கடற்போக்குவரத்தால், நாளாந்தம் பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டுவரும் நெடுந் தீவு மக்களின் போக்குவரத்து ஒழுங்கை, துரித கதியில் சீர்ப்படுத்த வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார். நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத் துத் தடைகள் கடந்த காலங்களிலும் இருந்தன. துறை சார் தரப்பினருடன் ஆராயப்பட்டதன் அடிப்படையில், வீதி அபிவிருத்தி அதிகார சபை இலவசமான போக்குவரத்துச் சேவையை இன்று வரை முன்னெடுத்து வந்தது. ஆனால் படகுச்சேவையை வழங்கும் குமுதினி, வடதாரகை, நெடுந்தாரகை ஆகிய மூன்று படகுகளும் தற்போது பழுதடைந்து செயற்பாடற்று இருப்பதால், மாற்று வழியின்றி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்த விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டு, ஆற்றலுள்ள படகொன்றை வாடகைக்கு அமர்த்தி, மக்களுக்கான சேவையை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க–27–பி)

உங்கள் நினைவுகளுடன் நான்காம் ஆண்டு



திருமதி. செல்வராணி சகாதேவன்
27 September 1952 - 07 June 2022
ஓய்வுநிலை அதிபர் யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

ஒரு ஆளுமைப் பெண்ணாக ஒரு
குடும்பத் தலைவியாக எம்முடன் வாழ்ந்த
உங்கள் வாழ்வின் நினைவுகளையும்
பெருமைகளையும் என்றும் நன்றியுடன்
நினைவுகூர்ந்து நிற்போம்

செல்வநிலாவகம்
280,(47) புகையிரத நிலைய வீதி கொக்குவில்

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 08 . 1968

மறைவு 22 . 05 . 2026

### திருமதி சரஸ்வதி சர்வேஸ்வரன்

இணுவில் கிழக்கு வங்கியடியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சர்வேஸ்வரன் அவர்கள் நேற்று (22.05.2026) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாக மித்திரன் கமலாம்பிகை தம்பதியினரின் மூத்த மருமகளும் சர்வேஸ்வரனின் அன்பு மனைவியும், கஜானன், கஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவன்சோதி, விஜயவர்த்தனி, மகேஸ்வரன், காலஞ்சென்ற கந்தசாமி, ஜெகசோதி, செந்தில் குமரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்னேஸ்வரன், மிர்லாலினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31850)A

## மரண அறிவித்தல்



தோற்றம் 22.04.1944

மறைவு 21.05.2026

### சுப்பிரமணியம் இராசதுரை

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், குளப்பிட்டி வீதி ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசதுரை அவர்கள் 2026.05.21 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலம்சென்றவர்களான பாலசிங்கம் லீலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக்கணவரும், இராஜேஸ்வரன் (சுவிஸ்), ஜெயா (கனடா), ஜெயந்தி (சுதுமலை), கஜேந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கொக்குவில்), நளாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மற்றும் நாகேஸ்வரி (சுவிஸ்) சுரேஸ்குமார் (கனடா), பிறேமானந்தன் (சுதுமலை), சிவரூபன் (காரைநகர்), கிருபாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்றவர்களான பூபாலசிங்கம், தில்லையம்பலம், இராசையா, மகாலிங்கம் மற்றும் பரமேஸ்வரி (கொக்குவில்), தங்கமலர் (கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலம்சென்ற இராஜேஸ்வரியின் ஒன்று விட்ட சகோதரனும், கபிரியல், லாரிஷா, மதுசன், சுதீஷன், கிருஷாந், யதுர்சனா, யஷ்மினி, கோபிநாத், அபிஷாந், கிருபிகா, நிவேதிகா மற்றும் கிருபிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2026.05.24 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிஅளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அவரது உடல் தகனக்கிரியைக்காக கொம்பயமணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை,
(நந்தினி பேக்கரி அருகாமையில்)

தகவல் :
குடும்பத்தினர்.
077 397 5227

CS 31853) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விக்கினேஸ்வர வித்தியின் அதிபர் கருணாகரனுக்கு இன்று மணிவிழா

யாழ்ப்பாணம், மே 23

கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் அதிபர் நாகலிங்கம் கருணாகரனின் மணிவிழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் உபஅதிபர் த.முரளீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அதிபர் நாகலிங்கம் கருணாகரன் கல்வித்துறையில் 38 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். 26 வருடங்கள் ஆசிரியராகவும், 12 வருடங்கள் அதிபராகவும் அவருடைய பணிக்காலம் அமைந்துள்ளது. இன்றைய மணிவிழா நிகழ்வில் அவரது கல்விச்சேவையைப் பாராட்டி கருணாதீபம் என்ற நூல் வெளியிடப்படவுள்ளது. நிகழ்வில் கல்வித்திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர், மற்றும் விரிவுரையாளர்கள், வித்தியாலய அபிவிருத்திச்சபையினர் மற்றும் பெற்றோர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-ச-66-131-40)

*சமையல் பாத்திரத்தில்*

# எண்ணெய்க்குப் பதிலாகப் பெற்றோல் இரண்டு பெண்களுக்குக் காயம்!

சாவகச்சேரி, மே 23

அடுப்பில் வைக்கப்பட்டிருந்த தாச்சிக்குள் எண்ணெய்க்குப் பதிலாக பெற்றோல் ஊற்றியதால் இரு பெண்கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் மட்டுவிலில் நேற்று இடம்பெற்றது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். திவசத்துக்காகப் பலகாரம் சுட்டுக்கொண்டிருந்த வேளையில் எண்ணெய் கொள்கலனில் வைக்கப்பட்டிருந்த பெற்றோலை தாச்சிக்குள் ஊற்றியபோதே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சர்வ...

நாடாளுமன்ற நேற்றைய அமர்விலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கயந்த கருணாதிலகவும், தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் நாடாளுமன்றக்குழுத் தலைவரான சாணக்கியனும் இந்த கோரிக்கையை விடுத்தனர். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்றுமுன்தினம் அனைத்து எதிரணிகளின் பங்கேற்புடன் கூட்டமொன்று நடைபெற்றது. இதன்போதும் சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## பொருளாதார...

பெர்னாண்டோ இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்ற நிலைமை மீண்டும் ஏற்படும் என்ற பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டு ரூபாவின் பெறுமதி சரிந்தமைக்கும் தற்போதைய சூழ்நிலைக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றதாலேயே 2022ஆம் ஆண்டில் அந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால் தற்போதைய நிலைமை அவ்வாறல்ல. ஊழல்களாலும், அரசியல் உறுதியற்ற நிலையாலும் தற்போது ரூபா வலுவிழக்கவில்லை. இதற்குக் காரணம் போரும் பொருளாதார நெருக்கடியும் மட்டுமே. எனவே, இன்று இருக்கும் நிலை வேறு. அன்று இருந்த நிலைவேறு. பொருளாதார நெருக்கடியால் இறக்குமதிக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என வெளிவரும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. பொருளாதாரச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படவில்லை - என்றார். (அ-ம-இ)

## 14 மாவட்டங்களில்...

கையில் உள்ளதாவது:-

தென்மேற்கு பருவக்காற்று படிப்படியாக நிலைபெற்று வருவதால் நாட்டின் பல பகுதிகளில் மழையுடனான காலநிலை வலுப்பெற்றுள்ளது. மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். மேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களின் சில இடங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும்100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும். தற்போது வரையான நிலவரத்தின் அடிப்படையில், சீரற்ற காலநிலை காரணமாக, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் உட்பட 14 மாவட்டங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கச் சாத்தியங்கள் உள்ளன.

மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2 மீற்றர் முதல் 3 மீற்றர் உயரம் வரை மேலெழும்பக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இதனால் நாட்டைச் சூழவுள்ள ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அதிகரித்துக்காணப்படுவதுடன் கடல் கொந்தளிப்பாகவும் இருக்கும் - என்றுள்ளது. (அ-ம-இ)

## உயிர்த்த...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாமல் தரப்பு சட்டத்தரணிகள் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் ஸஹ்ரானின் வாக்குமூலம் எங்கே என்று கடந்த காலங்களில் எம்மிடம் வினவி வந்தனர். தற்போது அந்த வாக்குமூலம் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் அவர்கள் கருத்துக் கூறுவதில்லை. அவர்கள் செய்த குற்றங்களுக்காக சட்டம் அவர்களைத் துரத்த ஆரம்பித்துள்ளது. உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விசாரணை எங்கே? வேகம் போதவில்லை, இன்னும் ஒன்றும் நடக்கவில்லையே என்று நகையாடியவர்கள், 'உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல்விசாரணைகளை அவசர கதியில் முன்னெடுப்பதற்கு அவசியம் என்ன?' என்று தற்போது கேட்க ஆரம்பித்துள்ளனர்.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவு பிரதானி சுரேஷ் சாலே மட்டும் பிரதான சூத்திரதாரி அல்லர். இதன் பின்னணியில் அரசியல் கரமொன்று உள்ளது. பிணங்களின் மீது ஏறி நின்று அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற பேராசைதான் இதன் பின்னணியில் இருந்தது. அப்படிப்பட்ட கொடூரங்களைச் செய்த 'கனவான்கள்'தான் இன்று 'பொதுமக்களின் பணத்தைச் செலவழித்து பிரான்ஸுக்குச் சென்று விசாரணை நடத்துவதன் தேவை என்ன?' என்று எம்மிடம் கேள்வி எழுப்புகிறார்கள் - என்றார். (அ-ம-இ)

## இந்திய...

புறப்பட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்ததைத் தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். கடந்த 90 நாள்களுக்கும் மேலாக விளக்கமறியல் கைதிகளாக உள்ள அவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தியே பாம்பன் பாலத்தை முடக்கி மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைச்சிறைகளில் உள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுவிப்பதற்கு முதல்வர் விஜய் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-இ)

## ஒருமாதச்...

சிகிச்சைக்காக தமது ஒருமாத ஊதியத்தை வழங்குவதற்கு நல்லூர்ப் பிரதேசசபையினர் முன்வந்துள்ளனர்.

நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் உட்பட, சபை உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதமின்றித் தங்களுடைய ஒருமாதக் கொடுப்பனவை வழங்க முன்வந்துள்ளமைக்குப் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (அ-ம-66-26)

## கௌரி சங்கரி...

மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய அரசியல் தலைவரான சிவாஜிலிங்கம் தனது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக மக்களிடம் உதவி கோரியிருந்தார். அவருடைய கோரிக்கைக்கு அமைய பல்வேறு தரப்புகள் அவருக்குப் பெருந்தொகையை நன்கொடையாக வழங்கி வருகின்றன. இதன்படி, திருமதி கௌரி சங்கரி தவராஜா ஞாபகார்த்த அறக்கட்டளை சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி தவராஜா பத்து லட்சம் ரூபாவை நன்கொடை வழங்கியுள்ளார். (அ-ம-26)

## முள்ளிக்குளம்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முள்ளிக்குளம் கிராமமக்கள் தமது பூர்வீக வாழ்விடங்களில் இருந்து கடந்த 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். அதன்பின்னர் 2002ஆம் ஆண்டு அவர்களுடைய சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்தப்பட்டனர். அவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக 150 வீடுகள் அமைக்கப்பட்டன. ஆனால், அந்த வீடுகள் மக்களிடம் வழங்கப்படவில்லை. மாறாக அதில் கடற்படையினரும், அவர்களின் குடும்பங்களுமே தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதனால், முள்ளிக்குளம் கிராம மக்கள் வேறு வழியின்றி அயற் கிராமங்களில் குடியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, கடற்படை மற்றும் வனவளத் திணைக்களம் என்பவற்றின் ஆக்கிரமிப்பில் உள்ள முள்ளிக்குளம் கிராமத்தை உடனடியாக விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம)

## தமிழர்...

யுறுத்தி, ஜே/256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்படி ஐந்தாவது வாரமாக நேற்றும் இந்தப் போராட்டம் தொடர்ந்தது. வலி.வடக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 650 ஏக்கருக்கும் மேற்பட்ட தமது காணிகளை அரசாங்கம் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-26-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# பெங்களூரை நேற்று வென்றது ஹைதராபாத்

## முதலாவது தகுதியாட்டத்தில் பெங்களூர் குஜராத் மோதும்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரைத் தோற்கடித்தது ஹைதராபாத். இந்த ஆட்டத்தில் தோல்வியடைந்தாலும், புள்ளிப்பட்டியலில் முதலாவது இடத்தை பெங்களூர் அணி உறுதி செய்தது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 4 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக இஷான் கிஷான் 79 ஓட்டங்களையும், அபிஷேக் சர்மா 56 ஓட்டங்களையும், கிளாசன் 51 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அணித்தலைவர் படிதார் அதிகபட்சமாக 56 ஓட்டங்களையும், வெங்கடேஷ் 44 ஓட்டங்களையும், குருனல் பாண்டியா 41 ஓட்டங்களையும் பெற்றனர். இந்த ஆட்டத்தின் முடிவுகளைத் தொடர்ந்து பிளேஓப் சுற்றில், முதலாவது தகுதியாட்டத்தில் பெங்களூர் குஜராத் அணிகள் மோதவுள்ளமை உறுதியாகியுள்ளது. ஹைதராபாத் அணியுடனான விலகல் ஆட்டத்தில் மோதவுள்ள அணியின் விவரம் வெளியாகவில்லை. ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் கொல்கத்தா ஆகிய அணிகள் பிளேஓவ் வாய்ப்பைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# எபோலாவை எதிர்கொள்ள தயார்நிலையில் இலங்கை

கொழும்பு, மே 22

கொங்கோ மற்றும் உகண்டாவில் பரவிவரும் எபோலா வைரஸ் தொற்று தொடர்பில் பொதுமக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை. குறித்த வைரஸ் பரவலை எதிர்கொள்வதுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முழுமையாக தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எபோலா வைரஸ் பரவல் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ள பின்னணியில், சுகாதாரப் பிரிவினரின் தயார் நிலை குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

இதன்போதே தற்போதைய நிலைவரம் குறித்து நாட்டு மக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை என்றும், இந்த வைரஸ் தற்போதைக்கு ஆபிரிக்காவின் ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே பரவியுள்ளது என்றும் இங்குசுட்டிக்காட்டப்பட்டது. எந்தவொரு அவசர நிலைமையையும் எதிர்கொள்ளும் முழுமையான தயார்நிலையில் சுகாதாரப் பிரிவினர் உள்ளதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர். (ச-இ)


## வீடு விற்பனைக்கு

மீசாலை மேற்கில் விக்னேஸ்வரா ம.வி - முன்பாக சோதியம்மா வீதியில் 150 யார் தூரத்தில் 5 1/2 பரப்புக் காணியுடன் வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 910 3340
077 290 6389

(cs14841) (N.1)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்சுவேலியிலிருந்து பருத்தித்துறை வீதி செல்லும் பிரதான வீதியிலிருந்து 200m தூரம் 18 பரப்புக் காணி மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உள்ளது.
ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் மட்டும்.
அச்சுவேலி பஸ் நிலையம் 500 m தூரம்
பார்வையிடும் நேரம் : காலை 8.30 தொடக்கம் மாலை 6.30 வரை
குடியிருப்புக்கள் உள்ள பகுதி. நல்ல சூழல்.

தொடர்பு:
077 623 4204

## விநியோகஸ்தர் தேவை



யாழ். நகரில் இயங்கும் எமது பத்திரிகை நிலையத்திற்கு அதிகாலையில் பத்திரிகை விநியோகிப்பதற்கு
**பத்திரிகை விநியோகஸ்தர் தேவை.**
வாகன சாரதி அனுமதி பத்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் சமூகம் தரவும்.
சனிக்கிழமை - 9.00 - 1.00

உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ் அச்சுவேலி நவக்கிரியில் 11 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு.
* அச்சுவேலியிலிருந்து நிலாவரை செல்லும் பிரதான வீதிக்கு அருகாமையில்
* ஒன்றரை (11/2) பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 15 அடி பாதையுடன்
* சுன்னாகத்திலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதி 200m தூரம்
* அச்சுவேலி நகரம் 2km
* பருத்தித்துறை வீதி 1km தூரம் (புத்தூர் சந்தி)
* நிலாவரை கிணறு 700m தூரம்
* செம்மண் காணி, நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
* ஒரு பரப்பின் விலை 22 இலட்சம் முதல் 18 இலட்சம்

தொடர்புகளுக்கு:
077 2880 152
076 7390 413

(CS 31849) A

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரவுண் வீதியில் 2 1/4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 076 155 9905


## மரண அறிவித்தல்



### செல்வி சாந்தாதேவி இராஜநாயகம்

(Supervisor - House of Hope - Inuvil)
(Masters Advertising (Pvt) Ltd - Colombo - 3)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், முதலியார் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சாந்தாதேவி இராஜநாயகம் அவர்கள் நேற்று (22.05.2026) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.T இராஜநாயகம் - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வசந்தாதேவி மற்றும் பாலகாந்தன் (Canada), பிறேமாதேவி, மஞ்சுளாதேவி (UK) ஆகியோரின் சகோதரியும், சபாரத்தினத்தின் (நுணாவில்) உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.05.2026) சனிக்கிழமை பிற்பகல் 03:00 மணிமுதல் 07.00 மணிவரை ஈசன்ஸ் மலர்ச்சாலையில் (பிரதான வீதி, யாழ்ப்பாணம்) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மீண்டும் நாளை (24.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிமுதல் ஈசன்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து மு.ப 10.30 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி தென் இந்திய திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பிறேமாதேவி நந்தகுமார் (சகோதரி)
நந்தகுமார் நிர்மலன் (பெறாமகன்)

(CS/31848) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல. 361 [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 23.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media